மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

95—

சேமிப்புக் கிடங்கு

***3507—திரு. அ. சௌந்தரபாண்டியன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

லால்குடி தொகுதி, புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், புஞ்சை சங்கேந்தியில் சேமிப்புக் கிடங்கு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி தொகுதிக்குட்பட்ட புஞ்சை சங்கேந்தி கிராமத்தில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் நெல்லை இருப்பு வைக்க கிடங்கு கட்டுவதற்காக சர்வே எண் 518/1A-ல் உள்ள இடம் தெரிவுசெய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவுக்கு அனுமதி கோரியிருந்த நிலையில், மேற்படி இடம் கிடங்கு கட்டுவதற்கு உகந்ததாக இல்லை என்று ஆய்வறிக்கை தரப்பட்டுள்ளதால், வேறு இடம் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.*

முற்பகல் 10–40

திரு. அ. சௌந்தரபாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு தளபதி அவர்களையும் வணங்குகிறேன். எனக்குப் பேச வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2017 ஜூன் 28]

லால்குடி தொகுதியில், லால்குடி, புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியங்களில் அதிக நிலப் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகின்றது. நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல்லை, பாதுகாப்பான முறையில் இருப்பு வைக்கும் வகையில், இடவசதி உள்ள, தொகுதியினுடைய மையப் பகுதியாக விளங்குகின்ற புஞ்சை சங்கேந்தியில் கிடங்கு கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று கூறியிருக்கின்றார்கள்.

விவசாயிகளினுடைய பரிதாப நிலையினைக் கருதி, அங்கே அவசியம் நெல் சேமிப்புக் கிடங்கு கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் பரிதாப நிலையைக் கருதி, நெல் கொள்முதல் கிடங்கு கட்டிக் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நான் சொன்ன பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாகக் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். ஏற்கெனவே அங்கு கிடங்கு கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டது. அந்த இடம் கிடங்கு கட்ட தகுதியான இடமில்லை என ஆய்வறிக்கையில் தெரியவந்துள்ளது. எனவே, புஞ்சை சங்கேந்தியில் வேறு இடம் பார்க்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் வைத்த கோரிக்கையான புஞ்சை சங்கேந்தியில் கிடங்கு கட்டுவதில் மாற்றுக் கருத்து எதுவும் இல்லை. விவசாயிகளின் பரிதாப நிலை என்பது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் இல்லவே இல்லை என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். திருச்சி மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்படும் நெல்லை சேமிப்பில் வைத்து, பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியாகத் தயார் செய்ய அதவத்தூரில் அரசுக்குச் சொந்தமான ஒரு நவீன அரிசி ஆலையும், 25 தனியார் அரவை ஆலைகளும் இயங்கிவருகின்றன. அதவத்தூரில் 18,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன சேமிப்புக் கிடங்கும், மண்ணச்சநல்லூர் தாலுகா, இருங்களூரில் 8,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கும், சுமார் 30,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் வாடகையின்றி நெல்லைச் சேமித்து வைக்கக்கூடிய தனியார் அரவை முகவர்களின் சேமிப்புக் கிடங்குகளும் உள்ளன. இதுதவிர, இருங்களூர், அதவத்தூர் ஆகிய இடங்களில் தலா 20,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரண்டு திறந்தவெளி சேமிப்புக் கிடங்குகளும் பயன்பாட்டில் உள்ளன. திருச்சி மாவட்டத்தில் தற்போது விளையக்கூடிய 50,000 மெட்ரிக் டன் நெல்லைச் சேமித்து வைக்கக்கூடிய அனைத்து வாய்ப்புகளும் இருக்கின்றன. எனவே, அதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப்படத் தேவையில்லை.*

இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட புஞ்சை சங்கேந்தியில் கிடங்கு கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் மாண்புமிகு தமிழகத்தினுடைய தன்னிகரில்லா முதல்வராக இன்றைக்கு விவசாயிகளுக்கு பல்வேறு நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.*

திரு. அ. சௌந்தரபாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடியில் ஆண்டு ஒன்றுக்கு 9,000 மெட்ரிக் டன்னிலிருந்து 12,000 மெட்ரிக் டன் வரை அரசின்மூலம் மட்டும் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. அதை*

2017 ஜூன் 28]

அதவத்தூரிலும், இருங்களூரிலும் இருக்கக்கூடிய கிடங்குகளுக்கு எடுத்துச்செல்லக்கூடிய தூரம் மிக அதிகமானதாக உள்ளது. அதோடு மட்டுமல்லாமல், வாடகைச் செலவும் அதிகமாக ஆகின்றது. எனவே, இந்தச் செலவினத்தைக் குறைப்பதற்கும், கால விரயத்தைக் குறைப்பதற்கும், கூடுதலான பணியாளர்களை நியமித்து வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்கும், மறுநாள் கொள்முதல் செய்யவிருக்கின்ற நெல்லை அன்றே கொள்முதல் செய்கின்ற வாய்ப்பை உருவாக்குவதற்கும், புஞ்சை சங்கேந்தியில் அந்த சேமிப்புக் கிடங்கினைக் கட்ட கால நிர்ணயம் செய்து, உடனடியாகக் கட்டிக் கொடுப்பாரா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மூன்றாவது முறையாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாக புஞ்சை சங்கேந்தியில் நெல் சேமிப்புக் கிடங்கு கட்டிக் கொடுக்கப்படும். அதற்கு இடமும் தேர்வு செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய வரலாற்றில் 12,85,000 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள கிடங்குகளின் மொத்த கொள்ளளவை 22,44,000 மெட்ரிக் டன்னாக உயர்த்திக் காட்டியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவழியிலேதான் தற்போதும் கிடங்குகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று, தமிழ்நாடு முழுவதும் கட்டி நிறைவேறும் சூழ்நிலையில், இனி கிடங்குகள் தேவையே இல்லையென்கிற நிலையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எய்தும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. ப. ரங்கநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*